### செப்டம்பர் மாதம் முதல் இதுவரை

# சென்னை மெட்ரோ ரெயிலில் 65½ லட்சம் பேர் பயணம்

## கடந்த மாதம் மட்டும் 20 லட்சம் பயணிகள் சென்றனர்

சென்னை,மார்ச்.2– சென்னையில் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது.

கடந்த செப்டம்பர் மாதம் முதல் இதுவரை மொத்தம் 65.50 லட்சம் பேர் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்து இருக்கிறார்கள்.

இதில் கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் 20.54 லட்சம் பேர் சென்றுள்ளனர். இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

**65.60 லட்சம்**

சென்னை மெட்ரோ ரெயில் சேவைகள் கடந்த செப்டம்பர் மாதம் 7–ந்தேதி முதல் மீண்டும் தொடங்கியது. இதில் 7.9.2020 முதல் 28.2.2021 வரை மொத்தம் 65 லட்சத்து 50 ஆயிரத்து 794 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

7.9.2020 முதல் 31.12.2020 வரை 31 லட்சத்து 52 ஆயிரத்து 446 பயணிகளும், 1.1.2021 முதல் 31.1.2021 வரை 13 லட்சத்து 43 ஆயிரத்து 695 பயணிகளும் 1.2.2021 முதல் 28.2.2021 வரை 20 லட்சத்து 54 ஆயிரத்து 653 பயணிகளும், 14.2.2021 அன்று ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 957 பயணிகள் மற்றும் 26.2.2021 அன்று ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 892 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

**கியூஆர் குறியீடு**

சமீபத்தில் தொடங்கப்பட்ட கியூஆர் குறியீடு பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி கடந்த செப்டம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 355 பயணிகளும் பயண அட்டை பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 34 லட்சத்து 64 ஆயிரத்து 840 பயணிகளும் பயணம் செய்துள்ளனர்.

பிப்ரவரி மாதத்தில் மட்டும் கியூ ஆர் குறியீடு பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 40 ஆயிரத்து 850 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச்சீட்டு முறையைப்பயன்படுத்தி 9 லட்சத்து 84 ஆயிரத்து 665 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.